செ.வெ.எண்:04 நாள்:02.02.2017

# பத்திரிக்கை செய்தி

கரூர் மாவட்டத்தில் உள்ள திரையரங்குகளில் அனுமதிக்கப்பட்ட கட்டணத்தை விட கூடுதலாக வசூல் செய்யும் திரையரங்குகள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்காகவும், அது தொடர்பாக வரப்பெறும் புகார்மனுக்கள் மீது விசாரணை செய்து நடவடிக்கை மேற்கொள்ளவும், சம்மந்தப்பட்ட வருவாய் கோட்டாட்சியர், சம்மந்தப்பட்ட காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் கரூர் கேளிக்கை வரி அலுவலர் ஆகியோரைக்கொண்ட கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு கடந்த ஓராண்டாக செயல்பட்டுவருகிறது. திரையரங்குகள் தொடர்பான புகார்களை பொதுமக்கள் தொலைபேசி வாயிலாகவும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறையின் பிரத்யேக, கட்டணமில்லா தொலைபேசி எண்ணான 1077 என்ற எண்ணில் புகார்களை தெரிவிக்கலாம். அப்புகார் வரப்பெற்ற அன்றே குழு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்/ குறுஞ்செய்தி மூலம் அனுப்பப்படும். குழு உறுப்பினர்கள் அடுத்த 24 மணிநேரத்திற்குள் சம்பந்தப்பட்ட திரையரங்கத்தை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள பரிந்துரை செய்வர்.

மேலும் அனுமதிக்கப்பட்ட கட்டணத்தை விட கூடுதலாக வசூல் செய்யும் திரையரங்குகள் மீது உரிய விதிமுறைகளின்படி அபராதம் விதித்தல் மற்றும் தொடர்ந்து தவறு செய்யும் திரையரங்குகளின் உரிமங்கள் தற்காலிகமாக ரத்து செய்தல் போன்ற கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கு. கோவிந்தராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு – செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.